மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம் இக்குழு மே மாதம் மூன்றும் நான்காம் நாட்களில் சென்னைக்கு வருகை தந்தது.

(இ) அவை முன் ஒரு விவா அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் உரத் தொழிற்சாலை

* 202 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் உரத் தொழிற்சாலை இருக்கிறது. அதுபோலவே அரசாங்கத் துறையில் அல்லது பொதுத் துறையில் அல்லது கூட்டுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்பட்டால் அந்த வட்டார மக்களுக்குப் பயன்படும். ஆகவே, அப்படித் துவங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் துறையில் கோவை மாவட்டத்தில் ஐந்து இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து ஆரம்பிக்க இப்போது தேவை இல்லை.

தூத்துக்குடி ரசாயன உரத்தொழிற்சாலை

* 203 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடி ரசாயன உரத் தொழிற்சாலையில் எப்போது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திட்டப் பணி மதிப்பீடுகளின்படி 1974-ம் ஆண்டின் துவக்கத்தில் தூத்துக்குடி ரசாயன உர தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: 1974-ல் துவங்கும் என்று சொன்னுர்கள். இவ்வளவு டன் உற்பத்தி செய்யும் என்ற முறையில் ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அம்மோனியா 1100 டன், யூரியா 1600, என். பி. கே. 600, ஸல்ஃபூரிக் ஆசிட் 470, ஃபாஸ்பாரிக் ஆசிட் 165.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த உரத் தொழிற்சாலை பொதுத் துறையில்தானே அமைகிறது என்று அறிய விரும்புகிறேன்.

---

*94–95-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.